DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 128 /2025 |
| Deposition of witness | : | P.W. – 1 |
| Name | : | நடராஜன் |
| Father's /Husband Name | : | சௌந்தரராஜன் |
| Village | : | மகிழஞ்சேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 40 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day November, 2025.
Accused present.

<u>முதல் விசாரணை</u> :–

நான் மகிழஞ்சேரியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி பக்கிரிசாமியை எனக்கு தெரியும். கடந்த 11.03.2025–ம் தேதி காலை 11.30 மணிக்கு வேலைக்கு செல்வதற்காக நானும், சாட்சி பக்கிரிசாமி என்பவரும் பக்கிரிசாமி என்பவரது இருசக்கர வாகனத்தில் மயிலாடுதுறை – திருவாரூர் சாலையில் சாலையின் இடது புற ஓரமாக சென்றுகொண்டிருந்தோம். அப்போது விஷ்வா என்பவர் தாறுமாறாக TN 50 8992 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்னால் மோதினார். அவ்வாறு மோதியதில் நான் கீழே விழுந்தேன். மேற்படி வாகனத்தை ஓட்டி வந்து மோதியவர் முருகன் மகன் விஷ்வா ஆவார். அதில் எனது வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டது. என்னை இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்த பக்கிரிசாமி என்பவரது கையில் லேசான காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருந்த போது நன்னிலம் போலிசார் என்னை வந்து விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

மோதிய நபரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் விபத்து ஏற்பட்டது தொடர்பாக நஷ்ட ஈடு கோரி திருவாரூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன் என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வாகனத்தின் பெயர் என்னவென்றால் Pulsor வாகனம் ஆகும். சம்பவம் நடந்ததாக

கூறப்படும் சமயத்தில் மழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரிதான். என்னுடன் பயணித்த நபருக்கு ஓட்டுனர் உரிமம் மற்றும் அவரது வாகனத்திற்கு பதிவு புத்தகம் மற்றும் காப்பீடு உள்ளதா என்றால் உள்ளது. போலிசார் என்னை விசாரித்த தேதி என்னவென்றால் தேதி நினைவில்லை. போலிசாரிடம் நாள் அளித்த வாக்குமூலத்தை எழுதிகொண்டு என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள். அந்த புகார் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால் தெரியாது. விபத்தை ஏற்படுத்தியதாக கூறுகின்ற நபருக்கு காயம் ஏற்பட்டு உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் அருகே பெட்ரோல் பங்க் உள்ளது என்றாலும், அது சாலையின் வலதுபுறம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனத்தை ஓட்டிய நபர் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எங்கள் இருசக்கர வாகத்திற்கு சேதாரம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும்தொடர்பில்லை என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.12.04 13:18:55 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 128 /2025 |
| Deposition of witness | : | P.W. – 2 |
| Name | : | பக்கிரிசாமி |
| Father's /Husband Name | : | ராமசாமி |
| Village | : | பனங்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 49 |
| Occupation | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day November, 2025.
Accused present.

<u>முதல் விசாரணை</u> :–

நான் பனங்குடியில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 நடராஜனை எனக்கு தெரியும். கடந்த 11.03.2025–ம் தேதி காலை 11.30 மணிக்கு வேலைக்கு செல்வதற்காக நானும், அ.சா.1 நடராஜனும் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் மயிலாடுதுறை – திருவாரூர் சாலையில் சாலையின் இடது புற ஓரமாக சென்றுகொண்டிருந்தோம். அப்போது எங்களுக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தில் நல்ல வேகமாகவும், தாறுமாறாகவும் வந்து நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. அவ்வாறு மோதியதில் எனது இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்திருந்த நடராஜன் கீழே விழுந்தார். அதில் அவரது வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி தான் அன்றைய தினம் இருசக்கர வாகத்தை வேகமாக ஓட்டி வந்து எனது வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். அ.சா.1–க்கு ஏற்பட்ட காயத்திற்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் மருத்துவக்கல்லுரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். எனக்கு கையில் லேசான காயம் ஏற்பட்டது. இதுசம்பந்தமாக நன்னிலம் போலிசார் என்னை வந்து விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

போலிசார் என்ன தேதியில் விசாரித்தார்கள் என்றால் 14.03.2025–ம்தேதி விசாரித்தார்கள். எனக்கு ஓட்டுநர் உரிமம், வாகனத்திற்கு பதிவு புத்தகம், காப்பீடு உள்ளதா என்றால் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தபோது எனது வாகனத்திற்கு

உண்டான பதிவு புத்தகம், காப்பீடு ஆகியவற்றை காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். எனக்கு மேற்படி பதிவு புத்தகம், ஓட்டுனர் உரிமம், காப்பீடு இல்லை என்றாலும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிசாரிடம் எதிரி ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணை கூறினேனா என்றால் இல்லை. சம்பவதினத்தன்று நன்றாக மழை பெய்தது என்றால் இல்லை லோசாக மழை பொய்தது. நான் தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும் இயக்கி பெட்ரோல் பங்க அருகே திரும்பி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது இருசக்கர வாகனத்தில் எந்த சேதாரமும் இல்லை என்றால் சரியல்ல, எனது வாகனத்தின் வலது பக்கத்தில் சில சேதம் ஏற்பட்டது. எனது வாகனத்தின் இருசக்கர வாகனத்திற்குண்டான ஆவணங்களை சமர்ப்பித்தேனா என்றால் சமர்ப்பித்தேன். நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1–க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.12.04 13:19:11 +0530